


திருவாரூரில் நடைபெற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் விவசாய விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.கண்டன உரையாற்றினார். முன்னாள் அமைச்சர் மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், மாவட்ட செயலாளர்கள் கௌதமன் , நிவேதா முருகன், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் வீரா தேசபந்து, விவசாய தொழிலாளர் அணி அமைப்பளர் க. அன்பழகன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளர்

# திருமதி இராஜம் ஜான் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 25-

கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளர் திருமதி இராஜம் ஜான் அவர்கள் மறைவு செய்தி அறிந்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

“கழகம் நடத்திய மதுரை சமூக நீதி மாநாட்டிலும், சேலம் மாநாட்டிலும், நெல்லை மாநாட்டிலும் அதிக மகளிர் கலந்து கொள்ளச் செய்தமைக்காக என் தங்கத் தலைவர் கையாலும் - எங்கள் தளபதியார் கையாலும் கேடயம் பெற்றதை எனது பேறாகக் கருதுகிறேன்” என்று அகமகிழ்வுடன் கூறிய கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளர் திருமதி இராஜம் ஜான் அவர்கள் நேற்று மறை வெய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன்.

திருநெல்வேலி மாவட்டம், விக்கிரம சிங்க புரம் பகுதியில் பல இடங்களில் மகளிர் அமைப்புகளை நிறுவி, மகளிர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் துணிவோடு போராடியதோடு, கழகப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றவர். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், இரயில் மறியல் போராட்டத்திலும், இராணிமேரிக் கல்லூரியை இடிக்க அ.தி.மு.க. ஆட்சியினர் முயன்றபோது, மாணவியர்க்கு ஆதரவாக இருந்த என்னை கைது செய்ததை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

இவரது கழகப் பணியினைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில், 20.09.2010 அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் விருதினை வழங்கிச் சிறப்பித்தார். இவரது இழப்பு கழகத்திற்கு மாபெரும் இழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், நெல்லை மாவட்ட, மாநகரக் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## நவ.25, 26, 27 தேதிகளில்

# தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் கனமழை!

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, நவ.25-

இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 23.11.2025 அன்று குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது எனவும், இதன் காரணமாக 25.11.2025 அன்று குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகி வலுப்பெறக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாழ்வுப் பகுதி தமிழ்நாட்டின் கடலோரமாக வடக்கு நோக்கி நகரக் கூடும் என்பதால் டெல்டா மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வரும் நாட்களில் கன மழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும்.

இன்று (25-ஆம் தேதி) கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

26-ஆம் தேதி - தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

27-ஆம் தேதி - தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், தமிழ்நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்களுடன் பேரிடரை எதிர்கொள்ள செய்யப்பட்டுள்ள முன்னெச்சரிக்கைகள் மற்றும் ஆயத்த நிலை குறித்து ஆய்வு செய்தார்கள்.

மேலும், 24.11.2025 முதல் 26.11.2025 வரை மன்னார் வளைகுடா மற்றும் குமரி கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 கிமீ முதல் 45 கிமீ வேகத்தில் வீசக்கூடும், இடைஇடையே மணிக்கு 55 கிமீ வேகம் வரை காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடும். 27.11.2025 முதல் 28.11.2025 வரை மன்னார் வளைகுடா மற்றும் குமரி கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 45 கிமீ முதல் 55 கிமீ வேகத்தில் வீசக்கூடும், இடை இடையே மணிக்கு 65 கிமீ வேகம் வரை காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடும்.

எனவே, மீனவர்கள் 24.11.2025 முதல் 28.11.2025 வரை கடல் பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆழ்க்கடலில் மீன்பிடிப்புப் பணியில் உள்ள மீனவர்கள் உடனே கரைக்குத் திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வானிலை முன்னறி விப்பின் காரணமாக, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் இரண்டு அணியினர் தூத்துக்குடி மாவட்டத்திலும், ஒரு அணி திருநெல்வேலி மாவட்டத்திலும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிக்காக முன்னெச்சரிக்கையாக நிலை நிறுத்தப்பட்டுள்னனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படையின் ஒரு அணி திருநெல்வேலி மாவட்டத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது மற்றும் 26.11.2025 முதல் விழுப்புரம் மாவட்டத்திலும் ஒரு அணி நிலைநிறுத்தப்பட உள்ளது.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப் பட்டு வருகிறது.

## கடையநல்லூர் பேருந்து விபத்தில் 6 பேர் பலி!

# பலியானவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் - தலா ரூ. 3 லட்சம் நிதி !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.25-

**தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், இடைக்கால் கிராமம், திருமங்கலம் - கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர் களின் அறிவிப்பு வருமாறு:-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், இடைக்கால் கிராமம், திருமங்கலம் - கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் (24.11.2025) காலை சுமார் 11.00 மணியளவில் இரண்டு தனியார் பேருந்துகள் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் பேருந்துகளில் பயணம் செய்த ஐந்து பெண்கள் மற்றும் ஒரு ஆண் உட்பட ஆறு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு கடும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 56 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரி வித்துள்ளார்

## இரா.இரத்தினகிரி மறைவு: சென்னை அண்ணா அறிவாலயத்தில்

# “கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டைப் பெற்றவர் இரா.இரத்தினகிரி!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ.25-

தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் திராவிட இயக்கத்தின் தீவிரப் பற்றாளருமான இரா.இரத்தினகிரி அவர்களின் மறைவுச் செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றை விவரிக்கும் “கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், திராவிட இயக்கத்தின் தீவிரப் பற்றாளருமான இரா.இரத்தினகிரி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் தலைவராகச் சுமார் 20 ஆண்டுகாலம் பணியாற்றிய திரு. இரத்தினகிரி அவர்கள், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் குழுவின் உறுப்பினர், பால்வளத்துறை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளின் ஆலோசகராகவும் இருந்துள்ளார். மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள அகில இந்திய கால்நடை மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் செயலாளராகவும் 18 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.**

**இவை மட்டுமின்றி, தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றை விவரிக்கும் ”கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து, முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டைப் பெற்றவர். 1976 முதல் இன்றளவும் திராவிடர் கழகம் வெளியிட்டு வரும் பெரியார் நாட்குறிப்பையும் இரத்தினகிரி அவர்கள் வெளியிட்டுள்ளார். ‘பெரியார் இயக்கம்’ மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.**

**உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இரத்தினகிரி அவர்களை, அண்மையில் நான் தஞ்சை சென்றிருந்தபோது நலம் விசாரித்ததை நினைவு கூர்கிறேன்.**

**ஈடுபட்ட அத்தனை பணிகளிலும் முழுமையான ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்திச் செயல்பட்ட இரத்தினகிரி அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார், நண்பர்கள், திராவிட இயக்கப் பற்றாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பி.டி.பாண்டிசெல்வம்- நொளம்பூர் வே.ராஜன் - அய்யப்பாக்கம் துரைவீரமணி முன்னிலை!

# மதுரவாயல் தொகுதியில் எஸ்.ஐ.ஆர். குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை!

சென்னை, நவ.25-

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் S.I.R. சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் பணிகள் குறித்து தொகுதி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் இன்று (செவ்வாய்க்கிழமை - 25.11.2025) மாலை 5.00 மணியளவில் காரம்பாக்கம் ஆற்காடு சாலையில் அமைந்துள்ள சென்னை லீ பேலஸ் ஹோட்டலில் மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளரும், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க. கணபதி தலைமையிலும், மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், 11வது மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், மதுரவாயல் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், தகவல் தொழில் நுட்ப பிரிவு தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 122 | மே.பொ. / சி.பரா. / வ.செ.அ.மி.நி - I | Providing potable water for NCTPS I Athipattu Camp |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/6294/ஒப்பந்தப்புள்ளி/2025


## கழக சட்டதிட்ட விதி:18, 19-ன் படி,

# தி.மு.க. தேர்தல் பணிக்குழு துணைத் தலைவர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக சட்டதிட்ட விதி:18, 19ன் படி, தி.மு.க. தேர்தல் பணிக்குழு துணைத் தலைவராக திரு.**கே.பி.சாமி**, (1/500, கள்ளியம்புதூர், விஜயமங்கலம், ஈரோடு 638 056. ) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 600 018,
நாள் : 24.11.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் புதுகும்மிடிப்பூண்டி ஊராட்சியில் உள்ள அனைத்து பூத்துகளில் எஸ். ஐ. ஆர். படிவத்தை பூர்த்தி செய்ய ஒன்றிய செயலாளர் கி.வே.ஆனந்தகுமார் ஏற்பாட்டில் பாக முகவர்கள் பணிகளை மேற்கொள்வதை மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே ரமேஷ்ராஜ் ஆய்வு செய்தார். உடன் மு. பகலவன், கே.வி.ஜி. உமாமகேஷ்வரி, ரவி, கதிரவன், ப.ச.குணசேகரன், வெங்கடாசலபதி, சுரேஷ், வெங்கடேசன், தமிழரசு, தியாகராஜன்,ப மணிகண்டன், லோகேஷ் சர்தார், அன்பு, வழக்கறிஞர் சுரேஷ், நத்தம் சரத் உள்ளிட்ட கழக தொண்டர்கள் கலந்து கொண்டனர்



துபாய் விமான சாகச நிகழ்ச்சியில் இந்தியாவின் தேஜஸ் போர் விமான விபத்தில் உயிரிழந்த விமானி (விங் கமாண்டர்) நமன் சியால் அவர்களின் உடலுக்கு கோயம்புத்தூர் சூலூர் விமான படை தளத்தில் நேற்று முன்தினம் (23-11-2025) மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.